மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 288/2013 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | மாரியப்பன் | நாள் | 26.09.2024 |
| தகப்பனார் பெயர் | மாதையன் | | |

6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–

1) வாதிகள் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என எனக்கு தெரியுமா என்றால், தாவா சொத்து அவர்களுக்கு பாத்தியப்பட்டது என கூறி எங்களுக்கு எதிராக பரிகாரம் கோரியுள்ளனர். 6 முதல் 8 வரையிலான வருவாய் துறையினருக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளனர் என்றால், பட்டாவை தங்களது பெயருக்கு மாற்றிதர வேண்டும் என கூறி பரிகாரம் கேட்டுள்ளனர்.

2) வாதிகளுக்கும், எங்களுக்குமிடையேயுள்ள தனிப்பட்ட சொத்து பிரச்சனை காரணமாகத்தான் இவ்வழக்கு எழுந்துள்ளது என்றால், சரிதான். வருவாய் துறையினரை பொருத்த வரையில், வருவாய் ஆவணங்களில் ஏதேனும் மாற்றங்கள் செய்யவேண்டும் என்றால், ஆவணங்கள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில்தான் செய்வார்கள் என்றால், சரிதான். அவ்வாறுதான் இவ்வழக்கிலும் தாவா சொத்தை பொறுத்து, வருவாய் துறையினர் சட்டப்படியான நடைமுறைகளை பின்பற்றிதான் செயல்பட்டுள்ளனர் என்றால், சரிதான்.

3) நீதிமன்ற உத்தரவுபடி 6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் செயல்பட தயாராக உள்ளனர் என்றால், சரிதான்.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.